157

67

# திருமந்திரம் சொற்பொருளுரை




உரையாசிரியர்

திருமூலரின் முத்தமிழ்வேத சதாசிவர்

## திரு. அடிகளாசிரியர்

உ

இறைவன் துணை

# திருமந்திரம்

# சொற்பொருளுரை.

**உரையாசிரியர்**

திருமூலரின் முத்தமிழ்வேதசதாசிவர்,

திரு. **அடிகளாசிரியர்,**

ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்,

குகையூர் - அஞ்சல்,

விழுப்புரம் மாவட்டம் - 606 306.

**பதிப்பாசிரியர்**

முனைவர் **அ. சிவபெருமான்,**

4சி, வெள்ளிவிழாச்சாலை,

செயங்கொண்டசோழபுரம்,

அரியலூர் மாவட்டம் - 621 802.

தமிழறிஞர் அடிகளாசிரியர் அறக்கட்டளை வெளியீடு - 2

## நூல் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திருமந்திரம் சொற்பொருளுரை |
| ஆசிரியர் | : | திரு. அடிகளாசிரியர் |
| பொருள் | : | சைவம் |
| ஆண்டு | : | திருவள்ளுவர் ஆண்டு 2043 |
| பதிப்பு | : | முதற்பதிப்பு, சனவரி - 2012 |
| அளவு | : | 1/8 டெம்மி |
| படிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | 52 |
| வெளியீடு | : | தமிழறிஞர் அடிகளாசிரியர், அறக்கட்டளை வெளியீடு, திருவருள் நிலைய வெளியீட்டகம், குகையூர் - அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் - 606 306. |
| அச்சகம் | : | தர்மு கணினி மையம், சிதம்பரம், கைபேசி : 9894400791 |

# திருமூலரின் முத்தமிழ் வேத சதாசிவர், நூற்றிரண்டு அகவையாளர், சீர்வளர்சீர் அடிகளாசிரியரவர்களின் குருவழி சிவவொடுக்க வழிபாட்டு வெளியீடு

மூதறிஞர், நூற்றிரண்டு அகவையாளர், பேராசிரியர், திருமூலரின் முத்தமிழ்வேத சதாசிவர், சீர்வளர்சீர் **அடிகளாசிரியர்** கரயாண்டு, மார்கழித்திங்கள் 23-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (8-1-2012) **நிறைநிலா** நாளாம் ஈசன் நாளாகிய **திருவாதிரையில்** ஈசன் நட்டம்பயின்றாடு நள்யாமம் நள்ளிரவு 10 மணி 45 நிமிடத்தில் **இறைவனோடு திருவருட் பேற்றில் கலந்து அகண்ட சிவமானார்.**

மேற்படி வீரசைவ ஞானியார் சீர்வளர்சீர் **அடிகளாசிரியரின்** சிவவொடுக்க வழிபாட்டு நிகழ்வு **கர யாண்டு, தைத்திங்கள் எட்டாம் நாள் (22-1-2012)** ஞாயிறன்று **குகையூர் சித்தநாதேச்சுராதீனத்தின் திருவருள் நிலையத்திற்குச்** சொந்தமான **சைவன் தோட்டத்தில் ஞானசமாதி வழிபாடும், இல்லத்தில் அடியார் வழிபாடும்** நிகழ்ந்தது. அவ்வழிபாட்டு காலத்தில் பங்கேற்ற அடியார்களுக்குத் **திருமந்திரச் சொற்பொருளுரை** என்னும் இந்நூல் வழங்கப் பெற்றது.

**இங்ஙன்,**
**அ. இளங்கோவன்,**
**அ. நச்சினார்க்கினியன்,**
**அ.சிவபெருமான்,**
**பே. இரவிசங்கர்** (பெயரர்),
(மூத்தமகன் அ. பேராசிரியர் மகனார்).

குகையூர்,
22.1.2012.

# பதிப்புரை

## (அ.சிவபெருமான்)

மூதறிஞர், பேராசிரியர், செந்நாப்புலவர் சீர்வளர்சீர் **அடிகளாசிரியர்** அவர்களது நூல்களை அச்சாக்கிப் பதிப்பித்து வழங்கிவரும் தமிழ்த் தொண்டினை 1983 - ஆம் ஆண்டிலிருந்து (முதுகலைப்படிக்கும் காலத்திலிருந்து) தொடங்கினேன். முதன்முதலாக அவரியற்றிய, பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் என்னும் **சிறுவர் இலக்கியத்தை** 1983 - ஆம் ஆண்டில் பதிப்பித்து வழங்கினேன். கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பரில் **சிவநாம மகிமை** மூலமும் உரையும் என்னும் நூல் வரை இருபத்தெட்டு ஆண்டுகளாக முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களை அச்சாக்கிப் பதிப்புப் பணியைச் செய்து வருகின்றேன். எனது குடும்ப வேலைகளைப் புறந்தள்ளி அய்யாவின் தமிழ்ப்பணிக்கு முதன்மை கொடுத்து இத்தகைய பணிகளைச் செய்து வந்துள்ளேன் என்பதை அனைவரும் அறிவர்.

இதுகாறும் பதிப்பித்து வந்த நூல்களை அய்யா அவர்கள் பார்வையிட்டு அரிய திருத்தங்களைச் செய்து கொடுத்தார்; அதன் பின்னர்தான் அந்நூல்கள் வெளிவந்தன. அத்தகைய அரிய வாய்ப்பை இழந்துவிட்டதால் இனிவரும் நூல்களை ஐயா அவர்கள் **சூக்கும உருவில்தான்** பார்க்க முடியும்.

குகையூர் சித்தநாதர் ஆதீனத்தின் குருவாக அமர்ந்து அருளாட்சி செய்து வந்தவர். அஃதோடு திருமூலரின் அருள் பார்வை அய்யா அவர்கட்கு உண்டாயிற்று. இவ்வருள் காரணமாகத் திருமூலர் அருளிய திருமந்திரத்தில் மிகுந்த ஆர்வங்காட்டித் திருமந்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டு பின்வரும் நூல்களை உருவாக்கினார்.

1. திருமூலரும் பேருரையும் *(1998)*
2. காயத்துள் நின்ற கடவுள் *(1999)*
3. கீதையின் அறிவுப் பொருள் *(2000)*
4. திருமந்திர உணர்வு *(2001)*
5. திருமூலரின் முப்பது உபதேசம் *(2002)*
6. திருமந்திரத்தில் எட்டாந் தந்திரம் மூலமும் உரையும் *(2005)*
7. திருமந்திரம் சொற்பொருள் உரை - *(2012)*
8. திருமந்திரத் திரட்டு - அச்சில்

**மேற்குறித்த திருமந்திரம் தொடர்பான நூல்களேயன்றி அய்யாவின் பின்வரும் நூல்களிலும் திருமந்திரக் கருத்துகள் உள்ளன.**

1. திருவாசகக் கோயில் திருப்பதிகம் - *1981*
2. சிவபுராணச் சிற்றுரை - *1986*
3. குதம்பைச் சித்தர் பாடலும் உரையும் (குட்டித் திருமந்திரம்) - *1999*
4. திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும் - *1999*
5. சசிவன்ன போதம் மூலமும் உரையும் - *2002*
6. பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும் - *2003*
7. உளத்தூய்மை - *1984*
8. திருவாசக அனுபூதி - *2000*
9. வீரசைவ சிவபூசாவிதி - *2008*
10. மெய்ப்பொருட் காதை - *1995*

மேற்குறித்த நூல்களில் ஆங்காங்கு திருமந்திரக் கருத்துகள் பதிவாகியுள்ளன. இவ்வாறு அவரது வாழ்நாளின் பிற்கால வாழ்க்கை திருமந்திரத்தோடே ஒன்றியிருந்தது. ஆதலால் அவரது **ஞானசமாதி வழிபாட்டில், திருமந்திரம் சொற்பொருளுரை** என்னும் இந்நூலை அச்சிட்டு வழங்கியுள்ளேன்.

மேலும் அய்யா அவர்கள் திருமந்திரம் சொற்பொருள்உரை என்னுந் தலைப்பில் நூறு பாடல்களுக்கு மேல் அரிய உரைக்குறிப்பை வழங்கியுள்ளார். ஆனால், அவற்றையெல்லாம் தொகுத்து முறைப்படுத்தி ஒழுங்கு செய்து வழங்க நீண்டகாலம் தேவைப்படும். ஆதலால், குறுகிய காலத்தில் இருபத்தொரு பாடல்களை மட்டும் ஒழுங்கு செய்து வழங்கியுள்ளேன். இப்பாடல்களைத் தயார் செய்து ஒழுங்கு செய்யவே ஏறத்தாழ **இரண்டு மாதங்கள் ஆயின.** இப்பாடல்களை அய்யாவிடம் படித்துக் காட்டி ஓரளவு திருத்தமும் செய்துள்ளேன். இருப்பினும் பிழைகள் இருந்தால் எமது பிழையாகும் என்பதைத் தமிழுலகத்திற்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் அச்சுவாகனம் ஏறி உலாவர உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் நன்றியுடையேன் ஆவேன்.

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே**

என்னும் திருமந்திரத்தைக் கூறி அய்யாவின் தமிழ்ப்பணியும் ஆன்மீகப்பணியும், சமூகப்பணியும் செம்மாந்து நிகழ **அவரது இணையார் திருவடிகளை நினைந்து வணங்குகின்றேன்.**

குகையூர் இங்ஙன்,
*22.1.2012* **அ. சிவபெருமான்.**

# ஐங்கரன் வணக்கம்.

1. **ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. (பாயிரம்)**

## பொழிப்புரை

ஐந்து கைகளை உடையவனாகி, யானையின் முகம் போலப் பெரிதாய் விளங்கும் நல்ல முகத்தினை உடையவனாகி, திங்களின் சிறு பிறை போன்ற பல்லினை உடையவனாகி நந்தி என்னும் சிவபெருமானுக்குத் திருமகனாய்ப் பிறந்து அச்சிவனை அறியப்பெறும் சிவஞானத்திற்குக் கொழுந்து போல் உச்சியில் விளங்கும் அவ்இறைவனை என் உணர்வின்கண் வைத்து, வைத்த உணர்வால் மகாவாக்கிய ஆராய்ச்சியால் தோன்றும் குரு பாதம் என்னும் சிவப்பேற்றைப் போற்றி உணர்கின்றேன்.

இப்பாட்டில் **அடி என்றது மகாவாக்கிய ஆராய்ச்சியால் தோன்றும் குருபாதம் என்னும் சிவப்பேற்றை.** இதனை,

**விரிவு குவிவற விட்ட நிலத்தே**
**பெரிய குருபதம் (2657)**

என்னும் திருமந்திரத்தால் அறிக. அன்றியே, ஐங்கரத்தான் அடி என்றலுமாம்.

### குறிப்பு:

**பரிபாடல்** *நாற்கை அண்ணல், ஐங்கைமைந்த அறுகை நெடுவேள் (3 : 36 - 37)* என்று கூறும் பகுதியில் மூத்த பிள்ளையாரை *ஐங்கைமைந்த* என்று குறிப்பிட்டது போல் திருமூலரும் *ஐந்துகரத்தனாய் நந்திக்கு மகனானார்* என்று குறிப்பிடுகின்றார்.

## ஞானி ஒருபகல் உண்டதன் பயன்.

**2. அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயில்என்**
**சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில்என்**
**பகரு ஞானி பகலூண் பலத்துக்கு**
**நிகரிலை என்பது நிச்சயம் தானே.**

*(1860)*

இப்பாட்டு திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் **மகேசுவர பூசை** என்னும் தலைப்பின்கீழ் வந்துள்ளது.

**அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயில்என் :**

சதுர்வேதி மங்கலம் என்ற பெயரால் அகரம் என்கின்ற பெயரை உடைய அந்தணர்க்கு ஆயிரம் குடியிருப்புகளை அமைத்துத் தானம் பண்ணியதால் உண்டாகும் பயன் எத்தகையது?

**சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில் என் :**

கோபுரங்களோடு கூடிய திருக்கோயில்கள் ஆயிரத்தை உண்டாக்கி, அதில் இறைவன் நிலைகாட்டி (ஸ்தாபித்து) வழிபாடு செய்து வருவதால் உண்டாகும் பயன் எத்தகையது?

**பகருஞானி பகலூண் பலத்துக்கு நிகரிலை என்பது நிச்சயம் தானே :**

அவையெல்லாம் வேதாந்த தத்துவத்தை உணர்ந்த ஞானி ஒருவனுக்கு உச்சிக்காலத்தில் அளித்த உணவுத் தானத்தின் பயனுக்கு மேற்சொன்ன இரண்டும் ஒப்பாகா.

**முடிபு :**

**அந்தணர்க்கு ஆயிரம் குடியிருப்புகளை அமைத்துத் தருவதைக் காட்டிலும், நாட்டில் ஆயிரம் திருக்கோயில்களை நிறுவுவதைக் காட்டிலும், வேதாந்த தத்துவத்தை உணர்ந்த ஞானி ஒருவருக்கு உச்சிக்காலத்தில் உணவு வழங்குவதே சிறந்த தானமாகும்.**

**குறிப்பு :**

மேற்பாட்டில் குறிக்கப்பெற்ற **அகரம்** என்பது அந்தணர் வாழ்கின்ற அக்ரகாரத்தைக் குறிக்குமென்க.

# சைவ சமய தத்துவங்கள்

3. பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி;
பதியினைச் சென்றுஅணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே. (115)

**பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில் :**

பதி என்றும், பசு என்றும், பாசம் என்றும் கூறப்படும் சைவ சமயத் தத்துவங்கள் மூன்றில்,

**பசுபாசம் பதியினைப் போல் அநாதி :**

பசு என்ற உயிரும், பாசம் என்கின்ற பந்தமும், பதி என்னும் முதற்பொருளைப் போல, தோற்றம் அறிய முடியாத தொன்மையான பொருளாகும்.

**பசு பாசம் பதியினைச் சென்று அணுகா :**

தொன்மையான பசு என்னும் உயிர், அதனைக் கட்டிய பாசமுடன் இருந்தால் பதியாகிய முதற்பொருளைச் சென்று அணுகாவாம்.

**பதியணுகில் பசு பாசம் நிலாவே :**

பதியாகிய முதல்வன் பசுவை அணுகினால் பசுவின், பசுத்தன்மையுடன் பாசம் நில்லாது சூனியமாய் விடும்.

**விளக்கம் :**

சைவசமயத்தத்துவம் **பதி, பசு, பாசம்** என மூன்றாகும். இம்மூன்றுள் பதியும் பசுவும் முறையே பேரறிவுப் பொருளும், சிற்றறிவுப் பொருளும் ஆகும். பாசம் சடப்பொருளாகும்.

**பதி – தலைமைப்பொருள்**
**பசு – தலைமையில்லாத பொருள் (உயிர்)**
**பதி – பேறாய் இருப்பது;**
**பசு – பேற்றினைப் பெறுவது;**
**பாசம் – உயிரைக் கட்டுவது.**

இம்மூன்று பொருள்களும் தோற்றம் அறிய முடியாத தொன்மைப்பொருள் என்பதை முன்னிரண்டடிகள் கூறுகின்றன.

பசு என்னும் உயிர்பதியினைச் சென்று அணுகினால் பசுத்தன்மையுடன் (கட்டுற்ற தன்மையுடன்) இறைவனை அணுகாது; பசுத்தன்மை நீங்கியே அணுகும்; பாசம் என்பது முதற்பொருளாகிய பதிமுன் ஒளிமுன் இருள்போல நில்லாது போய்விடும். ஆகையால், மூன்றாவது அடி பசுபாசம் பதியினைச் சென்று அணுகா என்று கூறுகின்றது.

பதி, பசுவை அணுகினால் பசுவிற்குள்ள பாசத்தன்மைக் கெட்டு விடுதலின் பசுத்தன்மையோடு நில்லா என்றார். பாசம் இருள் போன்றதாதலின் ஒளிப் பொருளாகிய பதிமுன் நில்லாததாயிற்று. அதனால் பதி அணுகில் பசுவின், பாசம் நிலாவே என்று கூறினார்.

## பதி, பசு, பாசம் என்பதைப் பற்றிய விளக்கம்

**பேரறிஞரும் பேரூரில் வாழ்ந்தவரும் ஆகிய தவத்திரு. சாந்தலிங்க சுவாமிகள்** இயற்றிய அவிரோதவுந்தி என்ற நூலில் திருமூலர் கூறிய பதி என்றதைப் பரன் என்றும், பசு என்பதைச் சீவன் என்றும், பாசம் என்பதைப் பந்தம் என்றும் வேறு சொற்களால் அமைத்துக் கொண்டு ஒரு பாடல் இயற்றியுள்ளார். அப்பாடல் வருமாறு.

**சுருதிகள் சொல்பல் சமயத் துணிவுமப்**
**பரசீவ பந்தமென்றுந் தீபற**
**பகர்நாமம் வேறுவே றுந்தீபற**

(பாடல் - 36)

**மேற்பாடல் வருமாறு:**

வேதங்களிலே கூறப்பட்ட பலவகை சமயங்களினது துணிவும் யாது எனில்? பரசீவ பந்தம் என்னும் மூவகைப் பொருள்களையும் உணர்த்துதலாம். அச்சமயிகள் அவற்றிற்குத் தம்தம் கொள்கைகளால் கூறாநிற்கும் குறியீட்டுச் சொற்கள் வெவ்வேறாய் இருக்கும்.

மேலும், **தவத்திரு. சாந்தலிங்கர்** பின்வரும் பாட்டில் கூறியுள்ள செய்தியும் இங்கு அறியத் தக்கதாம். அப்பாடல் வருமாறு:

**பல்லோர் துணிவும் பராதிமூன் றுந்தேர்தல்**
**அல்லால்வே றில்லேனும் உந்தீபற**
**அவரவர் கொள்கைவேறு உந்தீபற.** **(பாடல் 41)**

**பாடலின் பொருள் வருமாறு.**

வீட்டுநெறி ஆராயும் பல சமயிகளுடைய துணிவும் பரசீவ பந்தங்கள் என்னும் மூன்றையும் ஆராய்தலே அன்றி வேறு இல்லை என்றாலும், அந்த மூன்றுவகைப் பொருள்களினது உண்மைகளை அவரவர் கருதிக் கொள்ளும் கொள்கைகள் வெவ்வேறாய் இருக்கும்.

மேற்கூறிய இரண்டு பாட்டின் பொருள்களையும் கருதினால் **திருமூலர் கூறும் பதி, பசு, பாசம்** என்னும் மூன்று பொருள்களைப் பற்றிய செய்தி சுருதிகள் சொல்கின்ற பல சமயவாதிகளின் துணிவாகவும் இன்னும் பலருடைய துணிவாகவும் இருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்கின்றோம்.

மேற்பாட்டில் வந்துள்ள பல்லோர் **என்பது, சைவ,** வைணவ சமயத்தோரேயன்றி இக்காலத்தில் **வாழ்ந்துவரும், மகமதியர், கிறித்துவர்** முதலான பலரையும் குறிக்கும் என்க.

**திருமூலர் சொல்லும் பதி, பசு, பாசம் என்பது சைவ சமய கொள்கைகள் மட்டும் அல்லாமல் பல சமயவாதிகளுடைய துணிவாகவும் உள்ளது என்பதை அறிஞர் உணர்ந்து கொள்க.**

# தானச்சிறப்பு.

**4. ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்**
**பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கைஉடையீர்! விரைந்து ஒல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே. (250)**

இப்பாட்டு திருமந்திரம் முதல் தந்திரத்துள் **தானச் சிறப்பு** என்ற தலைப்பில் வந்துள்ளது.

**"தான தியாகமும் சிறப்பும் நல்கி"** என்றபாரதப் பாட்டின்படி தானம் என்பது உயர்ந்தவர்களுக்குக் கொடுப்பது. தியாகம் என்பது ஒத்தவர்களுக்குக் கொடுப்பது. சிறப்பு என்பது இழிந்தவர்களுக்குக் கொடுப்பது. இனி மேற்பாடலைப் பார்ப்போம்.

## அவர்இவர் என்னன்மின் ஆர்க்கும் இடுமின்:

அத்தகைய தகுதியுடையோர்; இத்தகைய தகுதியுடையோர் என்று தகுதியால் வரையறை செய்து கொண்டு, தானத்தைக் கொடுக்காமல் எல்லோருக்கும் அத்தானத்தைக் கொடுப்பீராக.

## பார்த்திருந்து உண்மின்:

ஒருவர் பசித்திருக்கும் நிலையை அறிந்து அவரோடு கூடி உண்பீராக.

## பழம்பொருள் போற்றன்மின்!

இச்செயல் பொருள்தானத்தை நோக்கியதாகும். தங்களுடைய பழைய பொருள்களைப் பாதுகாக்காமல் ஆர்க்கும் இடுமின்.

**வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின் காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே:**

உணவை உண்ணும் வேட்கை உடையவர்களே! நீங்கள் தனித்திருந்து மிகவிரைந்து உண்ணாதீர்கள். மக்களைக் காட்டிலும் அறிவில் குறைந்த காகம் உணவைப் பெற்றால் தம்முடைய உறவினர்களைக் கூட்டியே அழைத்து உண்ணும்; ஆதலால் இதை உணர்ந்து கொள்ளுங்கள்.

**குறிப்பு:**

1) மேற்பாட்டின் முதலடி உயர்ந்த அந்தணர்களுக்கே தானம் கொடுக்க வேண்டும் என்ற செய்தியைச் சொல்லவில்லை என்பது அறியத்தக்கது. தானம் கொடுக்கும் போது அவர், இவர் என்று தகுதிபாராமல் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்ற அரிய குறிப்பைத் திருமூலர் உணர்த்தியுள்ளார்.

2) மேற்பாட்டின் முதலடி பொருள் தானத்தையும், ஏனைய அடிகள் அன்னதானத்தையும் கூறுகின்றன.

3) விரைந்து, ஒல்லை - ஒரு பொருட் பன்மொழிச் சொற்கள்.

4) சித்தாந்த சிகாமணி என்கின்ற வீர சைவ நூல் தானத்தை உபாதி தானம், நிருபஉபாதிக தானம், சகசதானம் என்று மூன்று வகையாகக் கூறுகின்றது. பயன்கருதிக் கொடுப்பது உபாதிதானம் என்றும், பயன்கருதாமல் கொடுப்பது நிருஉபாதிகதானம் என்றும், ஈபவன், இரப்பவன், ஈயப்படும் பொருள் என்கின்ற மூன்றையும் சிவமாகவே கருதிக் கொடுப்பது சகசதானம் என்றும் கூறும்.

# கல்லா அரசனும் காலனும்.

5. **கல்லா அரசனும் காலனும் நேர்ஒப்பர்**
**கல்லா அரசனில் காலன் மிகநல்லன்**
**கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்**
**நல்லாரைக் காலன் நணுகநில் லானே .** (238)

மேற்பாட்டு திருமந்திரம் ஒன்றாம் தந்திரத்துள் **அரசாட்சி முறை** என்ற தலைப்பில் வந்துள்ளது. அப்பாட்டு இரண்டு பொருளுக்கு ஒப்புமை கூறி அவற்றுள் ஒரு பொருளுக்கு ஒப்புமை மறுத்துள்ளது.

## கல்லா அரசனும் காலனும் நேர் ஒப்பர்:

அரசாட்சி முறையை நூல்களைக் கொண்டு கற்றுக் கொள்ளாத வேந்தனும், மக்களுக்குக் கொடுமை செய்யும் கூற்றுவனும் தீங்கு செய்யும் நிலையில் நேர் ஒப்பராவர்.

## கல்லா அரசனில் காலன் மிக நல்லன்:

மேலே ஒப்பு கூறிய இருவருள் கல்லாத அரசனைக் காட்டிலும் கூற்றுவன் மிக்க நல்லவனாய் இருப்பன். **(எதனால் எனில்)**

## கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்:

கல்வி இல்லாத அரசன் அறத்தைச் சிந்திக்காதவனாய், நல்லோரையும் கொல் என்று கூறிப் பொருள் பறிப்பான்.

## காலன் நல்லோரை நணுகநில் லானே:

கூற்றுவன் நல்லோர்பால் அணுகாமல் நிற்பன் கல்லா அரசன் நல்லோர்க்கும் தீங்கு செய்வான்.

## குறிப்பு:

**கூற்றுவன் நல்லோர்க்குத் தீங்கு செய்யான் என்க.**

## ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை உலக மக்களுக்கு உபதேசிப்பது.

6. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே (2104)

இப்பாட்டு ஏழாந்தந்திரத்துள் **இதோ உபதேசம்** என்னும் தலைப்பில் வந்துள்ளது. நன்மையான கருத்துகளை உலகமக்களுக்கு உபதேசிப்பது **இதோஉபதேசமாகும்.**

**ஒன்றே குலம்:**

மக்களுக்கு வேற்றுமையை உண்டாக்கக் கூடிய பலகுலம் என்னும் சாதி இல்லையாம்; அவர்கள் ஒரே குலத்தவர் ஆவார்களாம்.

**ஒருவனே தேவம்:**

ஒரேகுலம் ஆனாற்போல அவர்கள் வழிபடுதற்குரிய தெய்வமும் ஒன்றே ஆகுமாம்.

**நன்றே நினைமின்:**

ஒருகுலமாய், ஒரு தெய்வ வழிபாட்டைக் கொண்ட நீங்கள் நல்லவற்றையே நினையுங்கள்.

**நமனில்லை:**

மேற்கண்ட நெறியைப் பின்பற்றினால் உங்களுக்குக் கூற்றுவன் (எமன்) செய்யும் வேலை ஒன்றுமில்லையாம்.

**நாள்நாமே சென்றே புகுங்கதி இல்லை:**

எல்லா நாளிலும் நாம் எமனுடைய ஆணையைப் பெற்றுச் சென்றுபுகும் நரகம், சுவர்க்கம் என்ற இரண்டும் இல்லையாம்.

**நும் சித்தத்து நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே:**

உங்களுடைய சித்தத்திலே நல்ல முறையில் நிலைபெறும்படி நீங்கள் மேலே கூறிய ஒரு குலம், ஒரு தெய்வம், நன்றே நினைதல் என்ற மூன்றையுமே நினைந்து உய்வீர்களாகுக.

# பிறவாமல் இருக்க இறைவனை நினையுங்கள்

7. இக்காயம் நீக்கி இனிஒரு காயத்தில்
புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத்து இவ்வுடல் வந்த(து)எமக்கு ஆனதுஎன்று
அக்காலம் உன்ன அருள்பெறல் ஆமே. (2106)

இப்பாட்டு ஏழாம்தந்திரத்துள் **இதோஉபதேசம்** என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இக்காயம் நீக்கி இனியொரு காயுத்தில் புக்குப் பிறவாமல் இருக்க மேற்பாடல் வழிசொல்கின்றது.

**இக்காயம் நீக்கி இனிஒரு காயத்தில் புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்:**

பெற்றிருக்கும் இந்த உடம்பை நீங்கச் செய்து, இனிமேல் மற்றொரு உடம்பில் புகுந்து பிறவா நெறியை மேற்கொண்டு, அதற்குரிய மாயையைக் கடந்த **வெட்ட வெளியிடத்தே** சென்று தங்கியிருக்கும் பற்றற்ற நெறியை மக்களே நாடுங்கள்.

**எமக்கு இவ்வுடல் எக்காலத்து வந்தது ஆனது என்று:**

எங்களுக்கு இந்த உடம்பு எக்காலத்திலே வந்து கிடைத்தது? எவ்வாறு செயல்படுகின்றது என்று?

**அக்காலம் உன்ன:**

அந்த காலத்தைக் கருதிப் பார்க்க

**அருள்பெறல் ஆமே:**

இறைவனுடைய திருவருளைப் பெறலாமே.

## விளக்கம்

மக்கள் தங்களுக்குக் கிடைத்த உடம்பைப் பற்றி எந்தவித சிந்தனையும் செய்யாமல், இவ்வுடம்பிற்குச் சோறிட்டு வளர்த்து அதனுடன் வாழவே கருதுகின்றனர். இவ்வாறு கருதும் அவ்வுணர்ச்சியை விட்டுவிட்டுப் பிறவாமல் இருக்கும் நெறியைக் கருத வேண்டும். அதற்காக முன்னே இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டும் என்பதை மேற்பாட்டு அறிவுறுத்துகின்றது.

## குறிப்பு:

மேற்பாடல் கருத்தை மூதறிஞர் அடிகளாசிரியர் உள்உணர்ந்து இறைவனுடைய திருவருளைப் பெற்றார் என்பது வெள்ளிடைமலை. (பதிப்பாசிரியர்)

# விந்துவே உயிர் ஆற்றல்.

8. அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னைஉட் காக்கலுந் தேரார்
அழிகின்ற காயத்து அழிந்தயர் வுற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்தொழி யாரே. (1936)

இப்பாட்டு திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் **விந்துற்பனம்** என்ற தலைப்பில் வந்துள்ளது.

**அழிகின்ற தன்மை அறிந்தொழியாரே:**

இவ்வடிப்பொருள் இப்பாட்டிற்கு எழுவாயாக உள்ளது. நின்று அழிகின்ற தன்மையை உணர்ந்து, அதிலிருந்து நீங்காதவராய் உள்ள ஒருவர்,

**அழிகின்ற விந்து அளவை அறியார்:**

அழிகின்ற விந்துவின் அளவை அறியாதவராய் இருப்பார்;

**கழிகின்ற தன்னை உட்காக்கலும் தேரார்:**

விந்து அழியும் பொழுது நீங்கிப் போகின்ற தன் ஆன்ம சத்தியைக் காக்கவும் தெரியாதவராய் இருப்பார்;

**அழிகின்ற காயத்து அழிந்து அயர்வுற்றோர்:**

விந்து அழியவே உடம்பும் அழியும் ஆதலின் உடம்பு அழியப் பெற்று, அயர்வை அடைபவராய் இருப்பர்.

**கருத்து:**

**விந்தை அளவுக்கு அதிகமாகச் செலவழித்தால் உயிர் ஆற்றலும் கெடும். உடம்பின் வலிவும் கெடும் என்பது பாட்டின் உட்கருத்தாம்.**

# புறச்சமயவாதிகள் பிறந்து இறப்பார்கள்

**9. கத்தும் கழுதைகள் போலும் கலதிகள்**
**சுத்த சிவமெங்கும் தோய்வுற்று நிற்கின்றான்**
**குற்றம் தெளியார் குணம்கொண்டு கோதாட்டியும்**
**பித்தேறி நாளும் பிறந்துஇறப் பாரே. (1538)**

இப்பாட்டு திருமந்திரம் ஐந்தாம் தந்திரத்துள் **புறச்சமய தூடணம்** என்ற தலைப்பில் வந்துள்ளது.

**கத்தும் கழுதைகள் போலும் கலதிகள்:**

கத்துகின்ற கழுதையை ஒத்த புறச்சமயவாதிகளாகிய கீழ்மக்கள்;

**சுத்த சிவமெங்கும் தோய்வுற்று நிற்கின்றான்:**

தூயசிவம் எல்லா இடத்திலும் வியாபித்து இருக்கின்றான் என்பதை அறியாராய்;

**குற்றம் தெளியார் குணம் கொண்டு கோதாட்டிப் பித்தேறி நாளும் பிறந்து இறப்பாரே:**

சிறந்த குணத்தை ஏற்றுக் கொண்டு சீராட்டுதலைத் தன் குற்றத்தால் தெளியாராய், நாளும் பித்தேறிப் பிறந்து இறப்பார்.

## சிவதுரியத்தைக் கண்டேன்.

**10. ஒழிந்தேன் பிறவி; உறவென்னும் பாசம்**
**கழிந்தேன்; கடவுளும் நானும்ஒன் றானேன்;**
**அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்**
**செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேன். (2958)**

இப்பாட்டு ஒன்பதாம் தந்திரத்துள் **அணைந்தோர் தன்மை** என்ற தலைப்பில் உள்ளது.

**உறவு என்னும் பாசம் கழிந்தேன்:**

என்னோடு பொருந்தியிருக்கும் பற்றுக்கு ஏதுவான கட்டுக்களை எல்லாம் நீக்கிவிட்டேன்; அதனாலே,

**ஒழிந்தேன் பிறவி:**

பிறப்பு என்னும் நோயிலிருந்து நீங்கினேன்.

**கடவுளும் நானும் ஒன்றானேன்:**

என்னைக் கடந்த பொருளாய் **(அதீதமாய்)** உள்ளே இருக்கும் தத்பதப் பொருளாகிய பரதுரியமும் துவம்பதப் பொருளாகிய சீவனாகிய நானும் ஒன்றாக ஆகிவிட்டேன். (இது **சாக்கிராதீத** நிலை என்க)

**அழிந்து ஆங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்:**

சீவனாகிய நான் வேறாய் இலாமல் பரதுரியத்தோடு ஒன்றி, பரமாகும் ஆக்கத்தையும் பேறாக வேண்டேன். (இது பரதுரிய தூடணமாகும்)

### செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே :

செழிப்புள்ளதாய்ச் சீவன் பரன் என்கின்ற இரண்டிற்கும் பற்றுக் கோடாய் உள்ள சிவதுரியத்தையும் கண்டேன்.

## முடிபு

**சிவத்தைக் கண்டு மௌன நிலையில் இருப்பேன் என்பது மேலடியின் கருத்து.**

# பற்று விட்டோர்க்கு வீடே (மோட்சம்) பயனாகும்

**11. ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்**
**நடுங்குவது இல்லை நமனும் அங்(கு) இல்லை**
**இடும்பயன் இல்லை இராப்பகல் இல்லை**
**படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே. (1624)**

இப்பாட்டு திருமந்திரம் ஆறாம் தந்திரத்துள் **தவம்** என்ற தலைப்பில் வந்துள்ளது.

### ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம் நடுங்குவதில்லை:

உலகப் பொருட்களில் பற்று செய்யாமல் அடங்கி நின்று மெய்ப்பொருளின் நிலை பெற்றுள்ள அறிஞரின் உள்ளம் உலகத்தில் அஞ்சத்தக்க பொருள்களைக் கண்டு அஞ்சுவதில்லை.

### நமனும் அங்கில்லை:

புண்ணிய பாவத்தின்மேல் பற்றுச் செய்யாமையால் சுவர்க்க நரகங்களில் கொண்டு போகின்ற நமனுக்கும் அவரிடம் வேலை இல்லை.

### இடும்பயன் இல்லை இராப் பகல் இல்லை:

இவர்கள் **(பற்றைவிட்டவர்கள்)** பிறருக்கு இட்டு அதனாலே அடைகின்ற பயனைப் பெறுவதில்லை. ஏன் எனில்? இவர்கள் ஏற்று உண்பவராய் இருத்தலின் மறத்தல் என்ற இரவும் நினைத்தல் என்ற பகலும் இவர்களிடம் இல்லை. **(அஃதாவது, நினைப்பு மறப்பு அற்றவர்கள் என்க)**

## படும்பயன் இல்லை பற்றுவிட்டோர்க்கே:

பற்று விட்டோராகிய இவர்களுக்கு வீடாகிய மோட்சமே பயனன்றி, அறம் பொருள் இன்பம் என்கின்றவை பயனில்லை என்க.

## குறிப்பு

**மூதறிஞர் அடிகளாசிரியர் மேற்பாட்டின் கருத்திற்குச் சான்றாவார். அவர் பற்றை விட்டவர் என்பதால்தால் நூற்றிரண்டு வயதிற்கு மேலும் வாழ்ந்து வரலாறு படைத்தார். (பதிப்பாசிரியர் கூற்று)**

# துறவற நெறியில் செல்பவர் சிந்திக்க!

12. நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்
நெறியில் வழுவாது இயங்கவல் லார்க்கு
நெறியின் நெருஞ்சிமுட் பாயகி லாவே (1617)

இப்பாட்டு திருமந்திரம் ஆறாம் தந்திரத்துள் **துறவு** என்ற தலைப்பில் வந்துள்ளது.

## நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்:

மக்கள் நடந்து செல்வதற்குப் பயன்படும்படி ஒற்றையடிப் பாதையான வழியினை இறைவன் உண்டாக்கினான். ஆனால், வழியின் பக்கத்திலே நெருஞ்சில் முள்ளையும் உண்டாக்கி விட்டான்.

## நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்:

ஒற்றையடிப் பாதை வழியே செல்லாமல் பாதை இல்லாத பக்கத்தில் கால்வைத்தால் நெருஞ்சில்முள் நடப்பார் காலைக் குத்திவிடும்.

## நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு நெறியின் நெருஞ்சில்முள் பாயகிலாவே:

ஒற்றைவழிப் பாதையை விடாமல் பற்றி நடப்பவர்க்குப் பக்கத்திலே உள்ள நெருஞ்சில்முள் அவர்காலைக் குத்தித் துன்புறுத்தாது.

### விசேடம்

இப்பாட்டு **உள்ளுறை உவமையாகும்.** இறைவன் நல்ல துறவற நெறியைப் படைத்துள்ளான். ஆனால், அதன் பக்கத்திலேயே கூடா ஒழுக்கத்தையும் படைத்துள்ளான். துறவற நெறியில் செல்பவர் தம்நெறியிலேயே நேராகச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாமல் வளைந்து கூடாஒழுக்கத் தீயநெறியில் செல்வாரேயானால் அது அவர்களைத் துன்பத்திற்குள் ஆழ்த்திவிடும்.

# குருமார்களுக்கு ஞானநூல் பயற்சி வேண்டும்.

13. **குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்கா குருவினைக் கொள்வார்**
**குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்**
**குருடும் குருடும் குழிவிழு மாறே. (1680)**

இப்பாட்டு திருமந்திரம் ஆறாம்தந்திரத்துள் **அபக்குவன்** என்ற தலைப்பில் வந்துள்ளது.

## பொழிப்புரை

குருட்டினை நீக்குகின்ற ஞானகுருவை மக்கள் கொள்வதில்லை. குருட்டினை நீக்கத் தெரியாத **சரியா குரு, கிரியா குரு,** முதலானவர்களையே மக்கள் குருவாகக் கொள்கின்றனர். இக்குருமார்களுக்கு ஞானநூல் பயிற்சி இல்லாமையினால் குருட்டுக் குருவாகக் கொள்ளப் படுகின்றனர். குருட்டினை நீக்கும் ஞானகுருவினைக் கொள்ளாமல் குருட்டினை நீக்கத் தெரியாத சரியாகுரு, கிரியா குருவினையே பலர் கொள்கின்றனர். இஃது, எத்தகையது எனில், விழியில்லாத குருடும், விழியில்லாத மற்றொரு குருடும் ஒன்றாகக் கூடி அறிவில்லாத செயல்களையே செய்து இருவரும் குழியிலே விழுவது போன்றதாகும்.

## குறிப்பு:

குரு என்பது வடசொல்லாகும். இச்சொல்லில் உள்ள கு என்னும் எழுத்திற்கு அறியாமை என்றும், ரு என்னும் எழுத்திற்கு நீக்குதல் என்றும் பொருள் கொள்வர். இதன்படி அறியாமையை நீக்குபவரே குரு ஆவார். அத்தகைய குருவானவர் ஞான நூல்களையெல்லாம் ஓதி உணர்ந்து தெளிந்தவராக இருத்தல் வேண்டும். அவரால்தான் மாணாக்கனுடைய அறியாமை நீங்கும்.

சரியை, கிரியை முதலானவற்றை மட்டும் பயின்ற குருமார்களுக்கு ஞானநூல் பயிற்சி ஏற்படுவதில்லை. அதனால் அத்தகையோர் மாணாக்கனுடைய அறியாமையை நீக்க முடிவதில்லை.

# நல்ல குருவால்தான் சிவபதம் கிட்டும்.

14. கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல் ஆவி உடன்ஈக
எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தெள்ளி அறியச் சிவபதந் தானே (1693)

இப்பாட்டு திருமந்திரம் ஆறாம்தந்திரத்துள் **பக்குவன்** என்ற தலைப்பில் வந்துள்ளது.

## கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக:

ஒருவர் குருவைக் கொள்வதாயின் சரியாகுரு, கிரியா குரு, ஆகிய இவர்களைக் கொள்ளாது ஞானகுருவாகிய நல்ல குருவினையே கொள்ளுக.

## உள்ள பொருள்உடல் ஆவி உடன்ஈக:

மேற்குறித்த ஞானகுருவிற்குத் தமக்கு உடைமையாக உள்ள பொருளையும் உடம்பையும் உயிருடன் கொடுத்துவிடுக.

## எள்ளத்தனையம் இடைவிடாதே நின்று தெள்ளி அறியச் சிவபதம் தானே:

அவ்வாறு ஈந்தபின் எள் அளவான சிறிது காலமும் இடைவிடாமல் அக்குருவுடன் நின்று ஞானநூல்களைத் தெளிவாகக் கற்றுச் சிந்தித்துத் தெளிவடைந்தால் அவர்க்குச் சிவபதம் கிட்டும்.

## முடிபு

ஞான குருவினைக் கொண்டு அவருக்கு உடல், பொருள், ஆவி ஆகிய எல்லாம் தந்து, அவரிடம் ஞான நூல்களைத் தெளிவாகக் கற்றுச் சிந்தித்துச் சிவபதம் பெறுக.

## சிவ உணர்வே உயிருக்குச் சிவவேடமாகும்.

**15. உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா**
**உடல்கழன் றால்வேடம் உடனே கழலும்**
**உடல்உயிர் உண்மைஎன்று ஓர்ந்துகொள் ளாதார்**
**கடலில் அகப்பட்ட கட்டைஒத் தாரே. (1677)**

இப்பாட்டு திருமந்திரம் ஆறாம் தந்திரத்துள் **சிவவேடம்** என்ற தலைப்பில் வந்துள்ளது.

**உடலில் துவக்கிய வேடம் உயிர்க்கு ஆகா:**

உடம்பின்கண் அணிந்த உருத்திராக்கம் முதலான சிவவேடங்கள் உடற்கு உரிய வேடமாய் உயிர்க்கே ஆகாவாம்.

**உடல் கழன்றால் வேடம் உடனே கழலும்:**

உடம்பு உயிரை விட்டு நீங்கினால் உடலுக்கு அணிந்த சிவவேடமும் உடலோடே நீங்கிவிடும்.

**உடல் உயிர் உண்மை என்று ஓர்ந்து கொள்ளாதார் கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே:**

உடலின் உண்மை இதுவென்றும், உயிரின் உண்மை இதுவென்றும் சிந்தித்து உணராதவர் கடல் நீரிலே அகப்பட்ட கட்டையைப் போல தம்மை இயக்குவாரின்றி உலகத்தில் திரிவர். (அலைப்புறுவர்)

## சிறப்பு விளக்கம்

உடல் மாயா காரிய பொருளாகிய சடமாகும். உயிர் சிற்றறிவுடைய சித்துப் பொருளகும். உடலாகிய காரியப் பொருள் அழிந்தால் மாயையாகிய காரணப் பொருள் ஒடுங்கிவிடும். அப்பொழுது அவ்வுடலில் வாழ்ந்த உயிர் உடல் அடங்கிய மாயையில் அடங்காமல் சித்துப் பொருளாகிய சிவத்திலேயே சென்று அடங்கும். அப்படி அடங்குவதற்கு ஏதுவாக உயிர் உணர்வில் சிவஉணர்வை உண்டாக்க வேண்டும். அச்சிவ உணர்வு தான் உயிருக்குச் சிவவேடமாக விளங்கும் என்க. இக்கருத்தினை,

**சத்த முதல்ஐந்தும் தன்வழித் தான்சாரில்**
**சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ?**
**சுத்த வெளியில் சுடரில் சுடர்சேரும்**
**அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள் அப்பிலே.**

**(திருமந்திரம், 135)**

என்னும் பாடற்கருத்தால் ஒப்பு நோக்குக.

# சீவதுரியமும் பரதுரியமும் சிவதுரியத்தை அறிய வேண்டும்

16. அவனும் அவனும் அவனை அறியார்
அவனை அறியில் அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவனை அறியில்
அவனும் அவனும் அவன்இவ னாமே. (1789)

இப்பாட்டு திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் **சம்பிரதாயம்** என்ற தலைப்பில் வந்துள்ளது.

## பொழிப்புரை

அவன் என்கின்ற சீவதுரியமும், அவன் என்கின்ற பரதுரியமும் அவனை என்ற சிவனை அறியார். இருவரும் சிவனை அறிந்து கொண்டால் அறியக் கூடிய பொருள் வேறொன்றும் இல்லை.

சீவதுரியமும் பரதுரியமும் சிவதுரியத்தை அறிந்து கொண்டால் அவனும் அவனும் என்ற இரண்டும் அவன் என்பதில் அடங்கிச் சீவனும் பரனும் சிவதுரியம் ஆகிவிடும்.

## கருத்து

அவனும் அவனும் என்ற இரண்டும் அச்சிவம் ஆகிவிட்டால் இந்த மூன்று பொருள்களின் கூட்டுறவு அவன் இவன் ஆதல் என்கின்ற இரண்டு வாய்ப்பாட்டில் அடங்கிவிடும்.

அவனும் அவனும் இவனாதலை **இவன்ஆதல்** என்று வழங்குவது ஒரு சம்பிரதாயமாகும்.

## குறிப்பு

**தத் துவம் அசி** என்னும் மூன்று பதத்தால் அமைந்த மகாவாக்கியத்திற்குத் தத்துவநூல்களை நோக்கித் துவம்பதத்திற்கு (தொம்பதத்திற்கு)ச் சீவனும், தத்பதத்திற்குப் பரனும், அசிபதத்திற்குச் சிவனும் என மூன்று பொருள்களை அமைத்துக் கொண்டு ஆராய வேண்டும். எனவே, **தத்துவமசி** என்னும் மகாவாக்கியத்திற்குச் **சீவன், பரன், சிவன்** என்னும் **மூன்று பொருள்களை** வைத்து ஆராய வேண்டும் என்பதே **திருமூலரின் கருத்தாகும். இக்கருத்தினை அறிஞர்கள் ஊன்றி உணரவேண்டும்.**

## உண்மைப் பொருளை உணர்ந்தவரே உணர்வுடையார்

17. **உணர்வுடை யார்கட்கு உலகமும் தோன்றும்**
**உணர்வுடை யார்கட்கு உறுதுயர் இல்லை**
**உணர்வுடை யார்கள் உணர்ந்தவர் காலம்**
**உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே.** **(1786)**

இப்பாட்டு திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் **சம்பிரதாயம்** என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

### உணர்வுடை யார்கட்கு உலகமும் தோன்றும்:

சிந்தித்து, தெளிந்து உணருகின்ற அறிவுடையோர்கட்குத் தம்மை அடுத்த பொருள்களேயன்றி உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் அறிவர்.

### உணர்வுடை யார்கட்கு உறுதுயர் இல்லை:

மேலே கண்டவாறு உணரும் உணர்வுடையார்கட்கு வரக்கூடிய துன்பம் எதுவும் இல்லை.

### உணர்வுடை யார்கள் உணர்ந்தவர்:

ஒன்றைச் சிந்தித்துத் தெளியும் உணர்வுடையார்களே உணர்ந்தவர் என்று கூறப்படுபவர் ஆவர்.

### உணர்வுடை யார்கள் காலம் உணர்ந்தவர் கண்டீர்:

உணர்வுடையவர்கள் முக்கால அறிவோடும் கூடி, அக்கால நிகழ்ச்சிகளை எல்லாம் அறிபவர் ஆவர்.

### கருத்து

**ஒருவர் ஒருபொருளைக் கற்றதோடு அன்றிக் கேட்டதோடுஅன்றி மேலும் மேலும் சிந்தித்து ஐயவிபரீதங்களைநீக்கித் துணிந்து உண்மைப் பொருளை உணரவேண்டும். அவ்வாறு உணர்ந்தவரே உணர்வுடையார் என்க.**

# தீர்த்தங்களில் நீராடுவதால் உடல் அழுக்கு நீங்குமேயன்றி உள்ள அழுக்கு நீங்காது.

18. **உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெள்ளக் குடைந்துநின்(று) ஆடார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே**
**கள்ள மனமுடைக் கல்வியி லோரே. (509)**

இப்பாட்டு திருமந்திரம் இரண்டாம் தந்திரத்துள் **தீர்த்தம்** என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. தீர்த்தம் என்ற வடசொல்லிற்குத் **தூய்மை** செய்வது என்றும், அல்லது தூய்மை என்றும் பொருள் கொள்ளலாம்.

திருவள்ளுவர் தூய்மையை அகந்தூய்மை என்றும், புறந்தூய்மை **என்றும் இரண்டாகப் பிரித்துக் கொண்டு (குறள் 298)** பொருள் உரைப்பதை உணர்க.

உடம்பு முதலான புறப்பொருள்களைத் தூய்மை செய்யத் தொடங்கின் தூய்மை செய்வதற்குக் கருவியாக நல்ல தண்ணீர் வேண்டும். உள்ளத்தைத் தூய்மை செய்யத் தொடங்கின் அதற்குக் கருவியாக வாய்மை முதலான சிறந்த பண்புகள் வேண்டுமென்று கூறுவர். இனி, மேற்பாடலின் சொற்பொருளுரையை நோக்குவோம்.

**உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்:**

நம் உள்ளத்திற்குள் அவ்வுள்ளத்தைத் தூய்மை செய்கின்ற நல்லறிவு, மெய்மை என்பவை போன்ற பல தீர்த்தங்கள் இருக்கின்றன.

**வினைகெட மெள்ளக் குடைந்து நின்று ஆடார்:**

தீவினை என்கின்ற அழுக்கு நீங்கும்படி உள்ளத்தினுள் உள்ள அறிவு, வாய்மை முதலானநீரினிலே விரைவு இல்லாமல் படிந்து மேற்கண்ட அழுக்கினைப் போக்கிக் கொள்ள சிலர் அறிவதில்லை.

**கள்ளமனமுடைக் கல்வியிலோர் பள்ளமும் மேடும் பரந்து திரிவர்:**

திருடு என்கின்ற பண்பை மனத்திற்குள் வைத்த கல்லாதவர் தாங்கள் தூய்மை அடைதல் பொருட்டுப் புறம்பான இடத்திலே உள்ள பள்ளத்திலே தீர்த்தங்களை நாடியும், மலை முகட்டிலேயுள்ள அருவிகளை நாடியும் சென்று மூழ்கி அலைந்து திரிவார்கள்.

**விளக்கம்:**

**பள்ளத்திலே உள்ள தீர்த்தத்திலும், மேட்டிலே உள்ள தீர்த்தத்திலும் நீராடுவதால் உடம்பு அழுக்கு நீங்குவதேயன்றி உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்காதென்க. ஆதலால், மனதிலுள்ள அழுக்குகள் நீங்க வாய்மை முதலான நல்ல பண்புகளைப் பெறவேண்டும்.**

# அகவழிபாட்டிற்குரிய அருள்ஒளியை உணர்ந்து பின்பற்றுக.

19. **புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி**
**நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி**
**அறமே புகுந்(து)எனக்(கு) ஆரமுது ஈந்த**
**திறமேதென்று எண்ணித் திகைத்திருந் தேனே. (1820)**

இப்பாட்டு திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் **அருள்ஒளி** என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

**புறமே திரிந்தேனை:**

உட்பொருளை ஆராயாமல் எனக்குப் புறம்பாய் உள்ள பொருள்களையே ஆராய்ந்து, அவற்றில் சிறந்த ஒன்றைப் பேறாகக் கருதி, வழிபட்டு வந்த என்னை **(புறவழிபாடு செய்து வந்த என்னை);**

**பொற்கழல் சூட்டி நிறமே புகுந்துஎன்னை நின்மலனாக்கி:**

என்னுடைய ஆசனாகிய நந்தி என்மேல் இரக்கங் கொண்டு, தன்னுடைய அழகான திருவடிவயை என் தலைமேல் சூட்டி, என் உள்புகுந்து என்னை மலம் அற்றவனாக ஆக்கி;

**அறமே புகுந்து எனக்கு ஆரமுது ஈந்த திறம் ஏது என்று எண்ணித் திகைத்து இருந்தேனே:**

எனக்கு அறத்தைத் தருபவனாய்ப் புகுந்து, அரிய அமிழ்தம் போன்ற ஞானோபதேசத்தைச் செய்தருளிய அவனுடைய செய்கைக்கு யான் என்ன புண்ணியம் செய்தேன் எனக் கருதி, திகைப்புற்று இருந்தேன்.

**கருத்து**

**புறவழிபாட்டிற்கு உரியவனாய் இருந்த என்னை என்ஆசான் அகவழிபாட்டிற்கு உரியவனாக்கினான் என்று கருதுக. எனவே, அகவழிபாட்டிற்குரிய அருள்ஒளியை உணர்ந்து பின்பற்றுக.**

## நந்தியின் அருட்செயல்.

**20. அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு**
**அருளில் அழிந்துஇளைப் பாறி மறைந்திட்டு**
**அருளான ஆனந்தத் தாரமுது ஊட்டி**
**அருளால் என்நந்தி அகம்புகுந் தானே. (1800)**

இப்பாட்டு திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் **திருவருள் வாய்ப்பு** என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

**அருளில் பிறந்திட்டு:**

திருவருள் உணர்வே முதலாக அதனில்தான் தோன்றி நின்று;

**அருளில் வளர்ந்திட்டு:**

திருவருள் உணர்விலேயே தான்நிலைத்து வளர்ந்து நின்று;

**அருளில் அழிந்து இளைப்பாறி:**

அருளினுள் தன்னுணர்வு அழிந்து, தன்னுணர்வில் திரிந்து, வருந்தியிருந்து இளைப்பாறி.

**மறைந்திட்டு:**

உலக எண்ணங்கள் தோன்றாதபடி, அருளிலே தான்மறைந்து வாழ்ந்து;

**அருளான ஆனந்தத் தாரமுது ஊட்டி:**

அருளினால் தோன்றிய அரிய அமிழ்தம் போன்ற இன்பப் பொருளை உண்பித்து;

**அருளால் என்நந்தி அகம்புகுந்தானே:**

இவ்வாறு செய்த அருட்செயல்களாலே நந்தியாகிய இறைவன் என்உள்ளத்தில் வந்து புகுந்தான்.

**முடிபு**

நந்தியாகிய இறைவன் பிறந்திடச் செய்து; வளர்ந்திடச் செய்து; இளைப்பாறி மறையச் செய்து, அரிய ஆனந்தமாகிய அமிழ்தம் ஊட்டி அகம்புகுந்தான்.

# தீட்சை முறைகள்.

21. **சமைய மலசுத்தி தன்செயல் அற்றிடும்**
**அமையும் விசேடமும் ஆனமந் திரசுத்தி**
**சமையநிர் வாணங் கலாசுத்தி யாகும்**
**அமைமன்னு ஞான மானார்க்கு அபிடேகமே. (1845)**

இப்பாட்டு திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் **சிவபூசை** என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

**சமையம் மலசுத்தி தன்செயல் அற்றிடும்:**

சைவ சமயத்துள் சமைய தீட்சையாவது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று மலங்களைத் தூய்மை செய்து தன்செயல் என்னும் ஆன்ம செயலை நீக்கி அரன் செயலில் நிற்றலாம்.

**அமையும் விசேடமும் ஆன மந்திர சுத்தி:**

பொருந்திய விசேட தீட்சையும் தான்பயிலும் மந்திரங்களைத் தூய்மையாக்குதலாகும்.

**சமைய நிர்வாணம் கலாசுத்தி யாகும்:**

சைவ சமயத்துக்குரிய நிர்வாண தீட்சையாவது பிரதியிட்டாக்கலை முதலான ஐந்து கலைகளைத் தூய்மை செய்தலாகும்.

**அமைமன்னு ஞான மானார்க்கு அபிடேகமே:**

மலசுத்தியினாலும், தன்செயல் அற்று இருத்தலானும், மந்திர சுத்தியாலும், கலாசுத்தியாலும் உண்டான ஞானமே அபிடேகத் தீட்சையாகும்.

................

# அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

(அ.சிவபெருமான்)

தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது கூகையூர் என்னும் குகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள்தங்கி, சிவயோகசமாதியை மேற்கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய்தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினார். அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுராதீனமாக ஆயிற்று. அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் 10.5.1910 - இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம் நாளில் திரு. அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் இயற் பெயர் குருசாமி அய்யர் என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத் தலைவர் தவத்திரு. மறைமலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

## இளமைக் காலமும் கல்வியும்

இவர்க்கு ஏழாம்யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம்பலூருக்கும் அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணியதேவர். இளையவர் கு. சிவப்பிரகாச தேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர். மருத்துவக்கலை, சோதிடக் கலை ஆகியவற்றிலும் வல்லவர், அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு.மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக் கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை முறைப்படிப் பாடங்கேட்டார். 1937 - இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்லைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப்புலவர் பட்டத்தைப் பெற்றார்.

## மயிலம் கல்லூரியில் பணி

14.07.1938 - இல் மயிலம் திருமடத்தில் சீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1.7.41 முதல் 30.11.41 வரை விரிவுரையாளராகவும் 11.2.42 முதல் 1.7.1950 வரை துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

## கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி

பின்னர் 3.7.1950 முதல் 3.7.1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 4.4.70ல் ஓய்வு பெற்றார். ஓய்விற்குப் பின் சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

## சென்னை / தஞ்சைப் பல்கலைக்கழகப் பணிகள்

சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு (1977) பணியாற்றினார்.

20-1-1982 ஆம் நாளிலிருந்து 1.10.-1985 ஆம் நாள்வரை **தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்பு நிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.**

## குடும்பம்

**"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்**
**விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"**

**என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே, பிறந்த கூரை வீட்டிலேயே மண் தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் எளிய இயற்கை வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தமது பொருளாதாரத்தைச் செலவிட்டு வேண்டுமென்றே எளிய இயற்கை வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.**

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனையமனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக கொண்டிருக்கின்றது. ஒரு நூறு (101) அகவை நிறைந்த முதிர்ந்த நிலையில் **எந்த ஆசையும் அற்று. தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டுமென்ற எண்ணம் ஒன்றுடன் மட்டுமே இவர் இன்றும் வாழ்ந்து வருகிறார்.**

## அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்செய் யுமாறே**

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் (102) தமிழ்ப்பணி செய்து வந்தார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரை நூல்கள் படைப்பிலக்கிய நூல்கள் என்ற பல்வகையில் 68 நூல்களைப் படைத்துள்ளார்.

# தமிழறிஞர் அடிகளாசிரியர் அவர்களின் ஆக்கத்தில் உரையில் பதிப்பில்

வடிவங் கொண்டெழுந்த அருந்தமிழ் நூல்கள் அறுபத்தியெட்டு பட்டியல் (ஆண்டு நிரலாக *1936 - 2012*)

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1. | வீரசைவப் பிரமாணம் (உரைநடை-சுவடிப்பதிப்பு) | 1936, 2008 |
| 2. | எங்களூர் (உரைநடை - ஆக்கம்) | 1937, 2004 |
| 3. | சதமணி மாலை (செய்யுள் - மூலம்) | 1938 |
| 4. | சிவப்பிரகாச விகாசம் (செய்யுள் - மூலம் - சுவடிப்பதிப்பு) | 1939 |
| 5. | பிள்ளைப்பாட்டு (ஆக்கம் - செய்யுள்) | 1945 |
| 6. | ஆறகழூர்க் காமநாதர்க் கோவை (செய்யுள் - மூலம் - ஓலைச்சுவடிப்பதிப்பு) | 1947 |
| 7. | திருஅரசிலிக்காதை (ஆக்கம் - செய்யுள் - தலபுராணம்) | 1948 |
| 8. | தொடக்கப்பள்ளி (ஆக்கம் - நாடகம்) | 1949-2010 |
| 9. | திருவலஞ்சுழி தேவாரப் பாடல்கள் - உரை | 1956 |
| 10. | மேன்மைப் பதிகம் (செய்யுள் - மூலம்-சுவடிப்பதிப்பு) | 1957 |
| 11. | தமிழகக் கல்வெட்டுகள் (ஆராய்ச்சி உரை - மு. கோவிந்தராசனுடன் இணைந்து) | 1957 - 58 |
| 12. | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாட்டும் சொற்பொருள் உரையும் | 1958 |
| 13. | சதுர்லிங்க தசகோத்திர தசகம் (செய்யுள் - பதிப்பு) | 1958 |
| 14. | குழந்தை இலக்கியம் (ஆக்கம் - செய்யுள்) | 1964 |

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 15. | சான்றாண்மை (ஆக்கம் - செய்யுள்) | 1964, 1975 |
| 16. | சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாட்டும் சொற்பொருள் உரையும் | 1967 |
| 17. | அருணகிரி அந்தாதி (பொழிப்புரை - சரசுவதி மகால் வெளியீடு) | 1967 |
| 18. | மருதூர் அந்தாதி-பழைய உரை (சரசுவதி மகால் வெளியீடு) | 1968 |
| 19. | காலச் சக்கரம் (சோதிடம் - சுவடிப்பதிப்பு - சரசுவதி மகால் வெளியீடு) | 1969, 1979 |
| 20. | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை (பதிப்பு) | 1969 |
| 21. | வராகர் ஓரா சாத்திரம் - பழைய உரையுடன் (சுவடிப்பதிப்பு - சோதிடம்) | 1970, 1981, 1991 |
| 22. | சிவஞான தீபம் - உரை (சரசுவதி மகால் வெளியீடு) | 1970 |
| 23. | வீரசைவ சிவபூசா விதி (உரைநடை - பதிப்பு) | 1976, 1997, 2008 |
| 24. | சிவப்பிரகாச விகாசம் - மூலமும் உரையும் (சரசுவதி மகால் வெளியீடு) | 1977 |
| 25. | ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம் வெளியீடு) | 1977 |
| 26. | தமிழிலக்கண, இலக்கியங்களில் சைவ சித்தாந்தம் (மதுராந்தகம் குருகுலம் வெளியீடு) | 1978 |
| 27. | வடசென்னிமலை திருமுருகன் தோத்திரப்பாமாலை (ஆக்கம்) | 1980, 2004 |
| 28. | அரசியல் இயக்கம் (ஆக்கம் - செய்யுள்) | 1981 |
| 29. | திருவாசகம் கோயில் திருப்பதிகம் - சொற்பொருள் உரை | 1981 |
| 30. | பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் - (ஆக்கம்) குழந்தை இலக்கியம் II. | 1983 |
| 31. | அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் (ஆக்கம்) | 1984 |
| 32. | உளத்தூய்மை (ஆக்கம் - செய்யுள்) | 1984, 1994, 2004,2005, 2009 |

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 33. | விலையேற்றமும் வாழும் வழியும் (ஆக்கம்) | 1984 |
| 34. | தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் இளம்பூரணர் உரை (தமிழ்ப் பல்லைக்கழகப் பதிப்பு) | 1985 |
| 35. | சிவபுராணச் சிற்றுரை - உரைநடை | 1986, 1999, 2007 |
| 36. | தொல்காப்பியம் - சொல்லதிகாரம்- இளம்பூரணர் உரை (தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு) | 1988 |
| 37. | தண்ணிழல் (செய்யுட் காப்பியம்) | 1990-2009 |
| 38. | சதமணி மாலை மூலமும் உரையும் | 1990 |
| 39. | சித்தாந்த சிகாமணியின் அங்கத் தலத் திரட்டு (கருத்துரை) | 1992 |
| 40. | ஸ்ரீமத் சிவஞான பாலதேசிகர் திருப்பள்ளி எழுச்சி - உரை | 1993 |
| 41. | மறவர் நத்தக் குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை (ஆக்கம் - செய்யுள்) | 1993 |
| 42. | தொழிலியல் (ஆக்கம் - செய்யுள்) | 1993, 2009 |
| 43. | மெய்ப் பொருட்காதை (ஆக்கம் - செய்யுள்) | 1995 |
| 44. | தமிழ் மாண்பும் தமிழ்த்தொண்டும் (ஆக்கம் - செய்யுள்) | 1996 |
| 45. | திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 1998 |
| 46. | ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள் (ஆக்கம் - செய்யுள்) | 1999 |
| 47. | திருமூல ஔவையார் அருளிய நல்வழி - மூலமும் உரையும் | 1999 |
| 48. | காயத்துள் நின்ற கடவுள் (ஆராய்ச்சி உரை) | 1999 |
| 49. | குதம்பைச் சித்தர் பாடலும் உரையும் | 1999 |
| 50. | திருவாசக அநுபூதி (ஆராய்ச்சி உரை) | 2000 |
| 51. | கீதையின் அறிவுப் பொருள் (ஆராய்ச்சி உரை) | 2000 |
| 52. | இட்டலிங்க அபிடேக மாலை என்னும் திருமுழுக்காட்டு மாலை மூலமும் உரையும் | 2001 |
| 53. | திருமந்திர உணர்வு (ஆராய்ச்சி உரை) | 2001 |
| 54. | சசிவன்ன போதம் மூலமும் உரையும் | 2002 |
| 55. | திருமூலரின் முப்பது உபதேசம் (ஆராய்ச்சி உரை) | 2002 |

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 56. | பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும் | 2003 |
| 57. | சிறுவர் இலக்கியம் (குழந்தைப் பாடல்கள்) | 2004 |
| 58. | திருமந்திரத்தில் எட்டாந்தந்திரம் - மூலமும் உரையும் | 2005 |
| 59. | நல்லவை நாற்பது (குகையூர் தமிழ்ச்சங்க வெளியீடு) | 2005 |
| 60. | திருநாளைப் போவார் திருக்காதை (ஆக்கம் - செய்யுள்) | 2006 |
| 61. | பெருந்திரட்டு - உபதேசப்பணை | 2006 |
| 62. | திரு.அடிகளாசிரியர் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் | 2007 |
| 63. | தொல்காப்பியம் - பொருளதிகாரம் - எட்டு இயல்கள் (செய்யுளியல் நீங்கலாக - தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு) | 2008 |
| 64. | தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி | 2008 |
| 65. | வீராகமம் மூலமும் பொழிப்புரையும் | 2011 |
| 66. | சிவநாம மகிமை மூலமும் உரையும் | 2011 |
| 67. | திருமந்திரம் சொற்பொருளுரை | 2012 |
| 68. | பிரபுலிங்கலீலை மூலமும் உரையும் | 2012 |

# அடிகளாசிரியர் பெற்ற பாராட்டுகள்

1. 1967 - ஆம் ஆண்டு இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் நிகழ்த்திய தொல்காப்பியம், இருசூத்திர விளக்கக் கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றுள்ளார்.

2. கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் மடாலயத்தைச் சேர்ந்த தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அ4டிகளார் அவர்கள் இவரைப் பேரூர் ஆதீனப் புலவராக்கிச் செந்நாப்புலவர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளனர் (28.02.72)

3. விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி தமிழ்க்கவிஞர் மன்றத்தினர் இவருடைய தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பதிப்பினைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளனர்.

4. தஞ்சாவூர் கரந்தை மீனாட்சியம்மன் திருக்கோவிலில் முறையாகச் சைவ சித்தாந்த நூல்களைப் பாடம் சொன்னதால் அக்கோயில் சைவ பிரச்சார சபையினரால் பாராட்டப் பெற்றுள்ளார்.

5. தமிழ்மொழிக்கு எண்ணிறந்த சேவைகளைப் பல்லாண்டு காலம் சலியாது செய்து வருகின்றமையால் திருக்கோவிலூர்ப் பண்பாட்டுக் கழகம் 1992-ம் ஆண்டிற்குரிய **கபிலர் விருதை** இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.

6. சென்னைக் கம்பன் கழகத்தினர் இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிச் சான்றிதழும் பணமுடிப்பும் வழங்கினர் (07.08.1992)

7. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இவருடைய தொல்காப்பியப் பணியைப் பாராட்டி இவருக்குத் **தொல்காப்பியச் செம்மல்** என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. (04.0-6.1997)

8. கும்பகோணம் வீரசைவப் பெரியமடம் இவருக்கு **வீரசைவக் காவலர்** என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

9. மயிலம் பொம்மபுர ஆதீனம் இவருக்குக் **கற்பனைக் களஞ்சியநம்பி** என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. (12.10.1998)

10. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இவரெழுதிய **திருமூலரும் பேரூரையும்** என்ற ஆய்வு நூலை 1998 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள் சிறந்த நூலாகக் கருதி முதல் பரிசாக உரூபாய் பத்தாயிரத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது. (15.01.2000)

11. சென்னையைச் சேர்ந்த சேக்கிழார் ஆய்வு மையத்தினர் இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டிச் **சேக்கிழார் விருதையும்** நினைவுப்பரிசாக ரூபாய் பத்தாயிரத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். (27.07.2001)

12. தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் மேன்மை தங்கிய **தமிழவேள் த.வே. உமாமகேசுவரன் பிள்ளைப்** பெயரில் விருது வழங்கிச் சிறப்பித்தனர். (09.01.2002)

13. காஞ்சிபுரம் சீசங்கரமடம் இவருடைய சைவப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து இவருக்குப் பத்தாயிரம் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தது. (18.01.04)

14. தமிழ்ச் சுரங்கம் - சென்னை - தொல்காப்பியர் விருதும் பொற்கிழியும் வழங்கிச் சிறப்பித்தது. (29.10.2006)

15. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் - தமிழ்ப் பேரவைச் செம்மல் விருதும் பொற்கிழியும். (13.2.2009)

16. நடுவண் அரசு, செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் சார்பாக இந்தியக் குடியரசுத் தலைவரின் விருதாக தொல்காப்பியர் விருதும் உரூபாய் ஐந்து இலட்சம் பொற்கிழியும் (28-3-2010) வழங்கிச் சிறப்பித்துள்ளது.

17. கல்லக்குறிச்சியில் உள்ள டாக்டர். ஆர். கே. சண்முகம் கலை (ம) அறிவியல் கல்லூரி 102 ஆம் வயதில் வாழும் தமிழ் எனும் விருதை வழங்கிச் சிறப்பித்தது.



மேன்மைமிகு இந்தியக் குடியரசின் தலைவர்
மேதகு பிரதீபா தேவிசிங் பாட்டீல்
அம்மையார் வழங்கிய
செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தின்
தொல்காப்பியர் விருது
06-05-2011